தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1975 மார்ச் 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

School Savings Bank Scheme.

***491 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the progress made in the implementation of the school savings bank schemes introduced by the Government during 1972-73 ?**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்டப் பேரவை முன் ஒரு அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்த சேவிங்ஸ் பாங்க் திட்டத்தில் ஆசிரியர்கள், குறிப்பாக சென்னை மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் பலவந்தப்படுத்தப்படுகிறார்கள். இதனால் மாணவர்களுடைய படிப்பு கெடுகிறது. ஆகவே, இந்தத் திட்டம் மாற்றியமைக்கப்படுமா ? யார் யாருக்கு வசதி இருக்கிறதோ அவர்கள் பூராவும் சம்பளம் கொடுக்கக்கூடிய முறையிலும் இந்தத் திட்டத்தை மாற்றியமைக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மாணவர்களிடத்திலே வங்கிகளில் சேமிக்கும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும், சேமிப்பு உணர்வை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவும் மத்திய அரசு வகுத்துத் தந்திருப்பதாகும். அதை ஏற்று மாநிலம் முழுவதும் நாம் இதைப் பரப்புகிறோம். இதில் பலவந்தம் எதும் கிடையாது. பட்டியலில் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால் ஓராண்டில் ஒரு கல்வி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் வசூலிக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 2,000 ஆகவும், ரூ. 120 ஆகவும் இருப்பதைப் பார்க்கலாம். சில கல்வி மாவட்டங்களில் "இல்லை" என்ற கணக்கு இருக்கிறது. மாவட்டம் முழுவதும் உள்ள கணக்கு இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கல்வி மாவட்டத்தில் 50, 60 பள்ளிகள் சேர்ந்திருக்கும். அத்தனை பள்ளிகளிலும் வசூலாகியிருப்பது 120 ரூபாய் என்று இருக்கும். சில இடங்களில் "இல்லை" என்றே கணக்கு இருக்கும். ஆகவே, இதில் கட்டாயப்படுத்தவில்லை என்பதைக்

@ 212-214ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

காணலாம். விரும்புகிற அளவுக்குச் செய்யவேண்டுமென்பது தான் திட்டத்தின் நோக்கம். சிறந்த நோக்கம் என்ற முறையில் பலவந்தம் இல்லாத அளவில் செயல்படுகிறது. எங்காவது பலவந்தம் இருக்குமானால் அதைத் தடுத்து நிறுத்த அரசு முயலும்.

திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் : தலைவர் அவர்களே, சேமிப்புத் திட்டத்தை எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயமாகக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி இதில் வற்புறுத்துதலோ கட்டாயமோ இல்லை. ஆனால், சேமிப்புப் பழக்கத்தை சிறு வயதில் உண்டாக்கினால் எதிர்காலத்தில் பயன்படும் என்று இந்திய அரசு திட்டத்தை வகுத்துத் தந்தது. அந்தத் திட்டம் சிலபல மாவட்டங்களில்—கல்வி மாவட்டங்களில்—நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. சில கல்வி மாவட்டங்களில் அவ்வளவாக வசூலாகவில்லை. ஆனால், ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து ஒத்துழைக்கும் தன்மையின் அடிப்படையில் நிறைவேறினால் நல்லது.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, மாணவர்கள் சேமிக்கும் நிதிக்கு வட்டி மட்டுந்தான் கிடைக்குமா ? அல்லது, அந்தத் தொகையோடு மாநில அரசும் ஏதாவது தொகை சேர்த்து, எதிர்காலத்தில் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கென்று விதிக்கப்பட்டிருக்கிற வட்டி கிடைக்கும்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது இம்மாதிரி வசதி செய்வதற்குப் பதிலாக ஏற்கெனவே இலவசக் கல்வி இருப்பதற்குப் பதிலாக, வசதியுள்ளவர்களுக்கும் பொது ஜனங்களுடைய பணத்தைக் கொடுக்க வேண்டியிருப்பதால், வசதியுள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று மாற்றியமைக்க சர்க்கார் முன்வருமா ? அப்படிப்பட்ட திட்டம் குறித்து அமைச்சர்களுக்குள் கருத்து வேற்றுமை உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதிலே கருத்து வேறுபாடு இல்லை. கல்வி மானியக் கோரிக்கையின்போதே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஏழை எளியவர்களுக்கு இலவசக் கல்வி தரவேண்டும் என்ற தன்மையிலிருந்து மாறுபாடு இல்லை. அந்த நிலைமை இருக்க வேண்டும். வசதி படைத்தவரிடத்தில் சம்பளம் வசூல் செய்யலாமா என்ற கருத்தைச் சிலர் எடுத்துச் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூட அதைச் சொல்கிறார். அந்தக் கருத்தின் காரணமாக ஏற்படுகிற விளைவுகளை நாம் ஆராய வேண்டும். ஆராயும்படியாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், சிறு சேமிப்புத் திட்டத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

1975 மார்ச் 31]

திரு. என். டென்னிஸ் : கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலில் முக்கிய மான நகரங்களான மதுரை, நாகர்கோவில் போன்ற இடங்களில் ஒரு மாணவரும் சேர்ந்ததாகக் குறிப்பு இல்லை. அந்த நகரங்களிலும் இவ் விதமான திட்டத்தை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா? கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியலில் ஆசிரியர்கள்—ஆசிரியைகள், மாணவர்கள் —மாணவிகள் சேமித்த மொத்தத் தொகை ஒன்ருகக் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆசிரியர்—ஆசிரியை சேமித்ததும், மாணவ—மாணவியர் சேமித் ததும் குறித்து பிரத்தியேகமாகப் பட்டியல் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனித் தனியாகப் பட்டியல் தரவேண்டும் என்ருல் தனியாகக் கேள்வி போட்டால் தனியாக விவரம் பிரித்துத் தரலாம். இப்பொழுது சேர்த்துத்தான் தரப்பட் டிருக்கிறது. ஆனல், சில கல்வி மாவட்டங்களில் மேலும் விளம்பரப் படுத்தி மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஊக்குவிப்பதன் மூலமாக இந்தத் திட்டத்திற்கு நல்ல ஆதரவு கிடைக்கும்படியாகச் செய்யலாம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, மாணவர்கள் சேமிக்கும் திட்டம் மிக நல்ல திட்டமாகும். மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் சேமிக்கும் தொகையோடு சிறு தொகையை ஈட்டுத் தொகையாக அரசு சேர்த்துக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்குப் பெரும் செலவாகும். கூடுதல் செலவு செய்யவேண்டிய அவசியம் ஏற்படும். அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு இல்லை.

Nursery and Montessori trained teachers.

*492 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether Nursery Training and Montessori trained teachers training would be made equivalent to Secondary Grade teachers training ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : நர்சரி பயிற்சி பெற்றவர்களும், மாண்டிசோரி பயிற்சி பெற்றவர்களும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தபின் இரண்டு ஆண்டுகள் பாடத் திட்டத்தின் அடிப்படையில் மேற்படி பயிற்சி பெற்றுத் தேறுகிருர்கள். அவர்களுக்கு இப்பொழுது அரசாங்கம் உத்தியோகம் பிரைமரி ஸ்கூலில் கொடுக்க மறுப்பதாகத் தெரிகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அவர் களுக்கு ப்ரைமரி ஸ்கூல்களிலும், எலிமெண்டரி ஸ்கூல்களிலும் ஆசிரியர் வேலை கொடுக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பள்ளி புகாத சிறுவர்களுக்குக் கல்வி தரும் பயிற்சி முறை வேருகவும், பள்ளி புகுந்த பிறகு 1 முதல் 8 வகுப்புகள் வரையில் துவக்கப் பள்ளியில் கல்வி தருவதற்கான பயிற்சி வேருகவும் இருக்கிறது.